**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் - 2018**

---

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 5228-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கைளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்ளக மற்றும் உள் விவகாரங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் மாகாண சபைகளின் மாகாண சுகாதார அமைச்சுக்கள் செயற்திட்டத்தில் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான இயலுமைக்காக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,000 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 200 மில்லியனாகக் காணப்பட்டதுடன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 09 மாகாண சபைகளின் மாகாண சுகாதார அமைச்சுக்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களுடன் இணங்கியதாக இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் விவகாரங்களினை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனா தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை 2019 மார்ச் 31 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 யூன் 13 இல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பிரதான தேவைப்பாடொன்று பூர்த்தியாக்கப்பட வில்லை. | ஒதுக்கீட்டுக் கணக்குகளினை பூர்த்திசெய்த பின்னர் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை தயாரிக்கப் படுகின்றது. | சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

மாகாண மட்டத்தில் காணப்படும் பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களினை மேம்படுத்துவதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கான ஆதரவொன்றாக செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2019 மார்ச் 29 இல் பிரசுரிக்கப்பட்ட செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம், 09 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் மற்றும் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் செயற்திட்டத்தின் பௌதீக இலக்குகள், செயற்திட்டத்தின் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| பொருத்தமான வகையொன்றில் நாட்டில் பொதுச் சுகாதார இலக்குகளினைப் பேணுவதற்கு பிரதானமாக பொறுப்புடையவர்களாகக் காணப்படுகின்ற 328 பொதுச் சுகாதார தாதியர்கள், 1,720 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களினை மாத்திரம் உள்ளடக்கியதாக மாகாண மட்டத்தில் நாட்டின் பொதுச் சுகாதார ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர் என இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இலங்கை பொருளியல் மற்றும் சமூக புள்ளி விபரங்கள் - 2019 சுட்டிக் காட்டப்படுகின்றது. | செயற்திட்டத்தின் இறுதி வெளியீட்டினை அடைந்து கொள்ள முடியாது போகும். | கருத்து வழங்கப்பட்டிருக்க வில்லை. | அக்கறையுடைய தரப்பினர்களின் எதிர்பார்ப்புக்களினை நிறைவேற்றுவதற்கு பொதுச் சுகாதார ஊழியர்களின் பற்றாக்குறையினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம், செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு ஆதரவளித்தல் அலகிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 67.80 மில்லியன் ஒதுக்கீடு உள்ளடங்களாக, செயற்திட்ட காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு ரூபா 4,135 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 2,931 மில்லியன் தொகையொன்று மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த ஒதுக்கீடு செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு பயன்படுத்த முடியாது போகும். | 2018 திசெம்பரின் பிற்பகுதியில் ரூபா 1,204 மில்லியன் ஒதுக்கீடு பெறப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு ஆரம்பத்தில் சாத்தியப்படக் கூடிய வகையில் கடனில் ஒதுக்கீடுகளினை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வடமேல், மத்திய மற்றும் மேல் மாகாணங்களின் மாகாண சுகாதார அமைச்சுக்களுக்காக பொதுத் திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட ரூபா 974.40 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புடைய மாகாண அமைச்சுக்களினால் ரூபா 651.19 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 323.21 மில்லியன் கூட்டுத்தொகையான செலவிடப்படாத வருமானங்களில் தொடர்புடைய மாகாண சபைகளினால் பேணப்பட்ட மாகாண நிதிக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வில்லை. | 2019 இல் ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ரூபா 3.32 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், கதிரைகள் மற்றும் மையநீக்கி போன்ற அலுவலக உபகரணங்கள், சபரகமுவ மாகாணத்திலுள்ள பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு, சுகாதார சேவை அலுவலகத்தின் மாகாண பணிப்பாளரினால் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 06 மாதங்களுக்கும் அதிகமாக விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. | மாகாண வைத்தியசாலைகளுக் கிடையே சொத்துக்களினை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வளங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வீரபுகெதர மற்றும் அதரகல்லயிலுள்ள மாவட்ட வைத்தியசாலைகளில் ரூபா 3.03 மில்லியன் கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவுகள், புல்நெவயில் ரூபா 1.20 மில்லியன் கிரயமொன்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாய் மற்றும் சேய் சுகாதார மருந்தகம் மற்றும் வடமேல் மாகாணத்திலுள்ள தென்னகோன்கம, திகல்ல மற்றும் நுகவெலயில் ரூபா 1.69 மில்லியன் கிரயமொன்றில் புனரமைக்கப்பட்ட ஏனைய தாய் மற்றும் சேய் மருந்தகங்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக, தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், வீரபுகெதர, கொனிகொட மற்றும் கல்கமுவயிலுள்ள பிரதேச வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவின் பயன்பாட்டிற்காக ரூபா 4.23 மில்லியன் கிரயமொன்றில் | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களுக்கு கிடைக்கப்பெற மாட்டாது. | தொடர்புடைய வைத்தியசாலைகள் உத்தியோகத்தர் களின் பற்றாக்குறையுடன் இயங்கிக் கொண்டிருக்கின்ற போதிலும், செயற்திட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்களினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையில், காணப்படும் அனைத்து வெளிநோயாளர் மருந்தகங்களும் தினசரி தொழிற்படுவதில்லை. ஆனால் மாதமொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தொழிற்படுகின்றன. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வளங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட இருதய உதறல்நீக்கிகள், ECG இயந்திரங்கள், பல் கண்காணிப்பான மற்றும் ஆக்ஸிஜன் கட்டுப்பாட்டாளர் போன்ற மருத்துவ உபகரணங்கள் ஒரு வருடத்திற்கும் அதிகமாக விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டது. | | | |
| (உ) | மத்திய மாகாணத்திலுள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு ரூபா 10.53 மில்லியன் கிரயமொன்றில் பகிர்ந்தளிக்கப்பட்ட 08 Defibrillator இயந்திரங்கள், விநியோகிக்கப்பட்ட பெற்றறிக்களின் குறைபாடுகள் காரணமாக, 03 வருடங்களுக்கும் அதிகமாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், Defibrillator, Auto clave மற்றும் Gluco மீற்றர் என்பன ரூபா 2.30 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டதுடன், மத்திய மாகாணத்திலுள்ள இலுக்கும்புற பிரதேச வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டதுடன் அத்தியவசியமான உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக, தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், அறுவைச்சிகிச்சை கருவிகள் ரூபா 1.25 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் மத்திய மாகாணத்திலுள்ள கம்மதுவ மற்றும் கஹவத்தயிலுள்ள பிரதேச வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டதுடன், எவ்வித அவசர சிகிச்சைப் | - மேற்படி - | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பில் உடடின நடவடிக்கைகளினை எடுப்பதற்கு, மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர்க்கு அறிவிக்கப்பட்டுள்ளது | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட வளங்கள்களின் பயன்பாட்டினை உறுதிப் படுத்துவதற்கான பொறிமுறையினை கண்காணிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவுகளும் ஸ்தாபிக்கப் பட்டிருக்காமையினால், தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. | | | |
| (ஊ) | மத்திய மகாாணத்தில் காணப்படும் உடவல பிரதேச வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் பல் மருந்தகமொன்றிற்கான கட்டிடத்தின் நிர்மாண வேலைகள், நிர்மாணத் தளத்திற்கான முறையான நுழைவு வீதிகளின் பற்றாக்குறை காரணமாக, இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வேலைகளினை முடிவுக்கு கொண்டு வரும் நேரத்தில் செயற்திட்டத்தினால் ரூபா 12 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 3.18 மில்லியன் கிரயமொன்றில் உடகம அடபக பிரதேச வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட உளவியல் புனர்வாழ்வு பிரிவு (Mental Rahabilations Unit), ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக, 02 வருடங்களுக்கும் அதிகமாக பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது. ரூபா 2.63 மில்லியன் கிரயமொன்றில் மத்திய மாகாணத்திலுள்ள இல்லுக்கும்புற பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு நுழைவு வசதிகளின் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. | - மேற்படி - | எவ்வாறாயினும், உடனடியாக மாற்று நடவடிக்கைகளினை எடுப்பதற்கு மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றார். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | மொரகஹந்த களுகங்க அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நிறுவனமொன்றாக, 2013 சனவரி 29 இன் 1793/18 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியினூடாக தகவல் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 2.74 மில்லியன் கிரயமொன்றில் மாத்தளை மாவட்டத்திலுள்ள கொன்கஹவல பிரதேச வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு செயற்திட்டத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | காலப்போக்கில் அவசர சிகிச்சைப் பிரிவினை பயன் படுத்துவதற்கான இயலுமை, தொடர்ந்தும் ஐயத்திற் குரியதாகக் காணப்படுகின்றது. | கருத்துரைக்கப்பட வில்லை. | எதிர்காலத்தில் அவ்வாறான நிலமைகளினை தவிர்க்கக்கூடியவாறு, காரணங்கள் விசாரணை செய்யப்படல் வேண்டும். |